**செய்தி வெளியீடு எண்: 669** **நாள்: 08.11.2012**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் நவம்பர் 2012 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 10.11.2012 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எ ண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை மாநகராட்சி அலுவலர் சமுதாய கூடம்,<br>எண் 69, அண்ணாபிள்ளைத்தெரு, சென்னை 79<br>(யானை கவுனி பஸ் நிலையம் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை உருது தொடக்கப்பள்ளி,<br>எண் , அர்த்தூண் ரோடு, இராயபுரம், சென்னை 13<br>( கல் மண்டபம் - காவல் நிலையம் பின்புறம்) |
| 3 | பெரம்பூர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>கபிலர் தெரு, சென்னை , சென்னை 11 (டான்பாஸ்கோ பள்ளி அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி<br>45/எ, சங்கராபுரம் மெயின் ரோடு<br>திருவள்ளுவர்புரம், சூளைமேடு, சென்னை 94 |
| 5 | அம்பத்தூர் | எபினேசர் ஜெகநாத் மார்கஸ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி<br>எண் .10, பாரதி தெரு, ராம்நகர், அம்பத்தூர், சென்னை 53<br>(ராக்கி தியேட்டர் பின்புறம்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மேல்நிலைப்பள்ளி,<br>எண்,பாலவாயல் சாலை, அயனாவரம்,சென்னை 23<br>(அயனாவரம் மார்கெட் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | அரசு மேல்நிலைப்பள்ளி,<br>எண் 114, பாடசாலை தெரு, மணலி, சென்னை 68<br>(ஜெயம் மஉறால் திருமண மண்டபம் எதிரில்) |
| 8 | ஆவடி | சமுதாயக்கூடம்<br>கிரான்ட் லைன் ஊராட்சி , புழல், சென்னை  62 |
| 9 | தி.நகர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி ,<br>மூன்றாவது அவென்யூ, அசோக்நகர், சென்னை 83 |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி சமூக நலக்கூடம்,<br>கங்கையம்மன் கோயில் சன்னதி தெரு, திருவான்மியூர், சென்னை 41 |
| 11 | பரங்கிமலை | புனித மார்க் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, ராதா நகர், ராதா நகர் மெயின் ரோடு, குரோம்பேட்டை, சென்னை 44 |
| 12 | தாம்பரம் | காமராஜர் பூங்கா, கிருஷ்ணாரோடு, புதுபெருங்களத்தூர்,<br>சென்னை -63 ( பெருங்களத்தூர் நூலகம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை மேல் நிலைப்பள்ளி<br>எண் 5, பர்லாங் ரோடு, மடுவின்கரை, சென்னை 32<br>(வேளச்சேரி செக்போஸ்ட் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி ஆண்கள் நடுநிலைப்பள்ளி<br>இராமநாயக்கன் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 34 |
| 15 | சேப்பாக்கம் | சென்னை உயர்நிலைப்பள்ளி ,<br>103, வீரபெருமாள் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை 4 |
| 16 | சோழங்கநல்லூர் | ஜே.எஸ். கல்யாண மண்டபம்,<br>எண்.3, ஈஸ்வரன் கோயில் தெரு, மடிப்பாக்கம், சென்னை 91<br>( ஈஸ்வரன் கோயில் அருகில்) |

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**